**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

CC .No. 602/2025

**2026 – ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12–ம் தேதி புதன்கிழமை அ.சா. 5– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

**அ.சா.** : 5

**பெயர்** : **பிரேம்குமார்** **தொழில்** : **டிராவல்ஸ்**

**த/பெ.** : **துரைராஜ்** **வட்டம்** : அரியலூர்

**கிராமம்** : கொல்லாபுரம் **வயது** : 30

**<u>12.08.2026</u>**

**( எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கொல்லாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் டிராவல்ஸ் நடத்தி வருகிறேன். 07.10.2021 அன்று பழைய அதிமுக அலுவலகம் அருகே சரத்குமார், தன்ராஜ், கார்த்திக் ஆகியோருடன் நானும் கிரிக்கெட் விளையாடிவிட்டு வீட்டிற்கு கிளம்பினோம். தன்ராஜ் பைக்கை ஓட்ட நான் அவர் பின்னால் அமர்ந்து சென்றேன். சரத்குமார் ஸ்கூட்டியை ஓட்ட கார்த்திக் பின்னால் அமர்ந்து சென்றார். நாங்கள் முதலில் பைபாஸ் சாலையில் ஏறிவிட்டோம். அப்போது பெரம்பலூரிலிருந்து அரியலூரில் உள்ள மகேந்திரா ஷோருமுக்கு ஸ்பேர்பாட்ஸ் ஏற்றி வந்த பொலிரோ பிக்கப் ஸ்பீடாக வந்தது. ADMK அலுவலகத்தின் அருகில் இருந்து மெயின் ரோடு நோக்கி சரத்தும், கார்த்தியும் ஸ்கூட்டியில் வந்தபோது பொலிரோ வாகனம் ஸ்கூட்டியில் மோதிவிட்டது. பொலிரோ வாகனத்தின் பதிவு எண். TN–45 BK –9164. சரத்துக்கு தலையில் அடிப்பட்டது. கார்த்திக்கு காலில் அடிப்பட்டது. உடனே நாங்கள் ஆம்புலன்சுக்கு போன் செய்து அரசு மருத்துவமனைக்கு அவர்களை அழைத்து

சென்றோம். அங்கிருந்து இருவரையும் AS மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சரத்குமார் இறந்துவிட்டார். பொலிரோ வாகத்தை ஓட்டியவரை நான் பார்த்தேன். ஆனால் தற்போது அவர் ஆஜரில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

விபத்தில் இறந்துபோன மற்றும் அடிப்பட்ட நபருக்கும் எனக்கும் என்ன உறவு என்றால் அவர்கள் என் நண்பர்கள். பொலிரோ வாகனத்தை ஓட்டிய நபரையும் அதன் பதிவு எண்ணையும் நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். போலீசாரை எங்கு வைத்து பார்த்தேன் என்றால் சம்பவ இடத்திலும் மறுநாள் காவல் நிலையத்திலும் பார்த்தேன். அப்போது என்னுடைய பெயர் முகவரியை போலீசார் வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு நான் போலீசார் பார்க்கவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு போலீசார் சம்மன் கொடுத்து தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். அனுகுசாலையிலிருந்து வரும்போது இரண்டு பக்கமும் பார்த்துவிட்டுதான் சாலையை கடக்க வேண்டும் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் இறந்துபோனவர் மற்றும் அடிப்பட்ட என் நண்பருக்கும் ஆதரவாக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u>

இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.